பாடம் 10

# ஓடிப்போன தீர்க்கதரிசி

***உன்னை ஒரு வேலைக்காக அழைக்கும் போது, உடனே நீ கீழ்ப்படிந்து அதைச் செய்தது உண்டா? யோனாவுக்கு ஒரு வேலையை தேவன் கொடுத்தார். ஆனால், யோனா என்ன செய்தார் என்று பார்ப்போமா?***

யோனா என்பவர் தேவனுடைய ஒரு தீர்க்கதரிசி. ஒரு நாள் தேவன் யோனாவைக் கூப்பிட்டு ஒரு வேலை கொடுத்தார். அவர் யோனாவிடம், "நீ பெரிய நகரமாகிய நினிவேக்குப் போ; அங்கே ஒரு இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கும் அதிகமான மக்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மிகவும் மோசமாக வாழ்கிறார்கள். தெய்வபயமே இல்லை. அவர்களது அக்கிரமம் என் சமூகம் வரைக்கும் எட்டியுள்ளது. எனவே, நான் சொல்வதை நீ அங்கு எச்சரிப்பாகப் பிரசங்கி!" என்றார்.

நினிவே மிகப்பெரிய நகரம். அந்த நகரத்தின் உள்ளே சென்று சுற்றிப் பார்க்கவே மூன்று நாட்களாகிவிடும். அத்தனை பெரிய நகரம். அங்கே போய் நின்றுகொண்டு அவர்களுக்குத் தீங்குவரப் போவதாக தேவன் சொன்னாரென்று எப்படிச் சொல்வது என யோனா யோசித்தார்.

மேலும், 'அத்தகைய பெரிய நகரம் 40 நாளைக்குப் பின் அழிந்துவிடும் என்று சொன்னால், என்னைக் கேலியாகப் பார்க்கக்கூடும்; ஏளனமாகச் சிரிக்கக்கூடும்; அதுவுமல்லாது, என்னை நையப்புடைத்து, உதைத்து விடுவார்கள்; என்னைக் கொல்லவும் துணிவார்கள். எனவே, இந்த வம்பே வேண்டாம். நினிவேக்குப் போகாமல் வேறு எங்கேனும் போய்விட வேண்டியதுதான்' என்று தனக்குள்ளே பலவாறாக யோசித்தார்.



**மனன வசனம்**

**உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.**

**சங்கீதம் 40:8.**

எனவே, அருகிலுள்ள துறைமுகமாகிய யோப்பாவுக்குச் சென்றார். அங்கே, தர்ஷீசுக்குப் போக ஆயத்தமாக இருந்த ஒரு கப்பலைக் கண்டார். 'நினிவேக்கு மட்டும் போகவேண்டாம்; மற்றபடி எங்குப் போனால் என்ன' என்று நினைத்தவராக தர்ஷீசுக்குப் போகிற கப்பலியே ஏறினார். பணம் கொடுத்து, கப்பலிலே பயணச்சீட்டையும் பெற்றுக்கொண்டார்.

வேகமாகக் கப்பலின் கீழ்த்தளத்திற்குச் சென்றார். அங்கே ஓரிடத்தில் படுத்துக் கொண்டார். மனதில் நிம்மதி வந்தது. தேவனுடைய பார்வையிலிருந்து தப்பி விட்டதாக எண்ணிக்கொண்டு நிம்மதியாகத் தூங்கிவிட்டார். 'தேவனுடைய பார்வையிலிருந்து எவரும் தப்பவே முடியாது' என்பதை அவர் சற்றும் எண்ணவில்லை.

அப்போது கர்த்தர் கடலின் மேலே பெரிய காற்றை வீசப்பண்ணினார். கப்பல் உடைந்துபோகு மென்று நினைக்கும் படிக்குப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது.

கடல் கொந்தளிப்பைக் கண்டு கப்பற்காரர்கள் மிகவும் பயந்தார்கள். கப்பலைப் பத்திரமாகப் பாதுகாக்கத் தங்களால் இயன்ற அளவு பல முயற்சிகளைச் செய்தார்கள். கப்பலில் உள்ள சரக்குகளைச் சற்றுக் குறைத்துக் கப்பலின் பாரத்தை இலகுவாக்கினால், கப்பல் மூழ்காமல் காப்பாற்றப் படும் என நினைத்தனர். எனவே, கப்பலில் இருந்த சரக்குகளில் சிலவற்றைக் கடலில் வீசி எறிந்தார்கள். அப்படியும் எதுவும் சரியாகவில்லை.

மேலும், அவர்கள் கப்பலிலுள்ள பயணிகளிடம் சென்று அவர்களிடம், ''கப்பல் மிகுந்த ஆபத்துக்குள்ளான நிலைமையில் இருக்கிறது. ''நமக்கு என்ன ஆகுமோ? அவரவர்



## செய்தி

**தேவ குடும்பத்தினர்கள் தேவ அன்பைப் பிறருடன் பகிர்ந்துகொள்வார்கள்.**

தங்கள் தெய்வத்திடம் வேண்டிக் கொள்ளுங்கள்'' என்றனர். அப்படியேயாவரும்வேண்டிக்கொண்டிருந்தபோது யோனாமட்டும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்ததைக் கண்டு மாலுமிகள் ஆச்சரியமடைந்தனர்.

மேலும் இந்தச் சூழ்நிலைக்குக்காரணம்காண சீட்டுப்போட்டனர். சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது; திகைத்தனர்.

யோனாவிடம் விசாரித்தனர். அப்போது யோனா, ''நான் எபிரெயன்; சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனிடத்தில் பயபக்தி உள்ளவன்'' என்றான்.

என் கண்ணே! தேவ பிள்ளையாகிய நீ பிறருக்குத் துன்பம் ஏற்படுத்தக்கூடாது.

***செய்முறை:*** **இங்கே கொடுக்கப்பட்டுள்ள படங்களில், நாம் அடிக்கடி செய்யக் கூடிய நல்ல செயல்கள் உள்ளன. அவற்றை மட்டும் வட்டமிடு.**

### புதிர் 10

